**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C.2472025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's /Husband Name | : | மாரிமுத்து |
| Village | : | வலங்கைமான் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 55 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 12th day of May 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.01.2025 ம் தேதி அன்று மாலை 18.00 மணிக்கு நான் குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவருடன் நானும் முதல் நிலைக்காவலர் திரு.சிவானந்தம் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்து வந்த போது குடவாசல் சரகம் வீதிவிடங்கன் டாஸ்மாக் அருகே நின்று கொண்டிந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் கணேசன் மகன் கலைவாணன் என்று கூறினார். மேலும் மேற்படி நபர் வைத்திருந்த TN 50 F 2257 என்ற பதிவெண்கொண்ட Bajaj PLatina இருசக்கர வாகனத்தை உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது அதில் சுமார்180 மி.லி அளவுள்ள Blackpearl Brandy 60 பாட்டில்கள் இருந்தது. அதை மேற்படி உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறினார். பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி காலை 18.15 மணிக்கு அதே இடத்தில் கைது செய்தார். பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த தடயப்பொருட்களையும் அவர் கடத்தி வந்த TN 50 F 2257 என்ற பதிவெண்கொண்ட Bajaj PLatina இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றுதல் மகசரில் 18.30 மணியளவில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், மேற்படி உதவி ஆய்வாளருடன் சென்ற நானும்

முதல்நிலைக்காவலர் சிவானந்தம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 14/2025 சட்டப்பிரிவு 4(1)( c) TNP Amendment Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித பணத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் தாமாக முன்வந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றாலும் சரியல்ல. தமிழ்நாடு மதுபான பாட்டில்களை கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து காவல் உதவி ஆய்வாளர் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், ஆய்வாளர் போடப்பட்ட பொய்வழக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.12 10:27:08 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.